## தலைப்பு 294 – தேசிய மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 பிரிவின் பின்வரும் விடயங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மை**

2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டுமெனினும், அந்த தேவையில் இருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களத்தினால் கட்டுநிதி சிராக்கல் கணக்கு தயாரித்திருக்கவில்லை. | 2018 நவம்பர் 21 ஆம் திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அடுத்த ஆண்டின் போது குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரித்தல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

**1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் படி திறைசேரி கட்டுநிதியாக ரூபா 483,848,000 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் திறைசேரி கட்டுநிதி ஆக மீளாய்வாண்டின் போது ரூபா 746,790,000 தொகை கிடைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | சரியான முறையில் தகவல்கள் அறிவிக்கப்பட வேண்டும். | நிதிச் செயலாற்றல் கூற்றின் படி திறைசேரியினால் கட்டுநிதி என உண்மையாக வழங்கியிருந்த ரூபா 483,848,000 இற்கான தொகை காட்டப்பட்டிருந்ததுடன் மீதியான ரூபா 263,000,000 இற்கான தொகை அபிவிருத்தி நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட தொகையொன்றாகும். திணைக்களத்தின் கீழ் 7042657 மற்றும் 7042658 ஆகிய இரண்டு கணக்குகள் தொடர்பாகவும் ஒரு கட்டுநிதிக் கணக்கு காணப்படுவதால் வேறு பெறுவனவுகளின் கீழ் அபிவிருத்தி நிதியத்தின் மீதி நிதிச் செயலாற்றல் கூற்றில் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் ரூபா 263,000,000 இற்கான தொகையும் அதில் அடங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களின் படி அபிவிருத்தி மற்றும் நலனோம்பு நிதியத்தில் இருந்து பெறுவனவு என ரூபா 1,008,802,202 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியத்தில் கணக்குகளின் படி அப்பெறுமதி ரூபா 1,008,194,599 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 607,603 இற்கான வித்தியாச மொன்று அவதானிக்கப்பட்டது. | ஏற்பாடுகளின் பிரகாரம் தகவல்கள் அறிவிக்க வேண்டும். | நிதிக்கூற்றுக்களின் படி நிதியத்தில் இருந்து ஏனைய பெறுவனவுகள் என ரூபா 1,008,802,202 தொகை கணக்கிடல் மேற்கொள்ளப் பட்டிருந்தது 2018 ஆண்டிற்கான அபிவிருத்தி நிதியத்திற்கான காசேட்டின் மூலமேயாகும். |

| | | |
|---|---|---|
| (இ) நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் என ரூபா 1,014,529,096 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் ஏனைய பெறுவனவுகள் ரூபா 16,995,542 தொகை என அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரியாக கணக்கீடு செய்யப் பட வேண்டும். இவ்வாறான குறைபாடுகள் ஏற்படுவதை தவிர்த்து கொள்ள வேண்டும். | நிதிச்செயலாற்றல் கூற்றில் ஏனைய பெறுவனவுகள் என ரூபா 1,014,529,096 தொகை பதிவு செய்யப்பட்டிருந்தது அபிவிருத்தி நிதியத்திற்குரிய பெறுவனவுகளாக காணப்பட்டதுடன் அவ்வாறு பதிவு செய்யாவிடின் கட்டுநிதி மீதிகள் சீராக்கல் செய்வதற்கு முடியாது என தயவுடன் அறிவிக்கின்றேன். இந்த இரண்டு கணக்குகளுக்கும் ஒரு கட்டுநிதி கணக்கு பேணப்படுவதால் இதற்கான காரணம் என மேலும் அறிவிக்கின்றேன். கணக்காய்வு அறிக்கையில் தாங்கல் சுட்டிக் காட்டியது அரச வருமானத்தின் தலைப்புகளுக்காக கிடைத்த பெறுவனவுகளை மற்றும் கொடுப்பனவுகள் இடையே காணப்படும் வித்தியாசமாக இருந்ததுடன் இந்த சீராக்கல்கள் ஏனைய பெறுவனவுகனின் கீழ் மற்றும் கட்டுநிதி இணக்கஞ் செய்வதன் மூலம் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது என. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மிருகக்காட்சிச் சாலைகள் திணைக் களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இடையே ரூபா 2,645,579,202 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | 2018 நவம்பர் 21 திகதிய 267/2018 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 நிதி ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது பிழைகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திறைசேரி பதிவின் படி 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கு மீதி ரூபா 77,354,959 தொகை எனினும், அது தவறுதலாக ரூபா 72,354,959 தொகை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீதிக்கு சமமான பெறுமதியொன்று தேசிய சொத்துக்களின் கீழ் ஒதுக்கம் ஒன்றாக காட்டப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அதே போல் முற்பணக் கணக்கின் மீதி மற்றும் வைப்புக் கணக்கின் மீதியிடையே வித்தியாசத்தை தேறிய சொத்துக்கள் என இனங்கண்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2013 ஜூலை 12 திகதிய அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் கடிதத்தின் பிரகாரம் சரியாக சொத்துக்களை வகைப்படுத்தி ஒவ்வொரு சொத்தின் பெறுமதியை சொத்தின் குறியீட்டுக்கு உரியதாக சரியாக இனங்கண்டிருக்கவில்லை. அதன் விளைவாக வருட ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி மாத்திரம் நடைமுறைச் சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2019 ஆண்டிற்கான நிதிக் கூற்றின் மூலம் இந்த தவறினை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்கள கணக்குகளில் நிதி அல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகள் முறையே ரூபா 4,383,908,211 தொகை மற்றும் ரூபா 2,446,564,947 தொகையாக காணப்பட்டமையால் திறைசேரி கணக்கு களில் நிதி அல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 1,937,343,264 தொகை மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல் திறைசேரியின் சொத்துக்கள் அறிக்கைகளின் பிரகாரம் ஒவ்வொரு துணை குறியீட்டின் கீழ் ஆரம்ப மீதிகள் காட்டப்பட்டிருந்த போதிலும் திணைக்கள கணக்கில் அவ்வாறு ஒவ்வொரு துணை குறியீடுகளின் கீழ் ஒவ்வொரு சொத்துக்களுக்கும் உரிய மீதிகளை இனங்கண்டிருக்கவில்லை. | வித்தியாசத்திற்கு காரணங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (ஊ) | திறைசேரிச் சொத்துக்கள் அறிக்கையின் பிரகாரம் ஆண்டின் போது ரூபா 210,686,869 தொகை பெறுமதியான நிதி அல்லாத சொத்துக்கள் கொள்வனவு எனக் காட்டப்பட்டிருந்ததுடன் திணைக்கள கணக்குகளின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 217,897,402 தொகை ஆகக் காணப்பட்டமையால் ரூபா 7,210,533 தொகை மிகையாக திணைக்களப் புத்தகங்களில் கொள்வனவு செய்தல் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வித்தியாசத்திற்கு காரணங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (எ) | திறைசேரியின் ஏடுகள் மற்றும் திணைக்களக் கணக்குகளில் நிதி அல்லாத சொத்துக்களின் இறுதி மீதிகள் முறையே ரூபா 4,593,931,985 தொகை மற்றும் ரூபா 2,664,462,349 தொகை காணப்பட்டமையால் ரூபா 1,929,469,636 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்திற்கு காரணங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஆண்டின் போது ரூபா 663,095 தொகை பெறுமதியான சொத்துக்கள் அகற்றப்பட்டிருந்ததென திறைசேரியின் சொத்துக்கள் அறிக்கையை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்ட போதிலும் அதற்காக பதிவுகள் ஏதும் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் காணப்படவில்லை. | வித்தியாசத்திற்கு காரணங்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது இதனை சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 1.6.4 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டுத் தொழிற்பாடுகளில் உருவாகிய காசுப்பாய்ச்சல் என காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 743,145,952 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதாந்த பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 1,819,037,840 தொகை ஆகும். அதன் படி ரூபா 1,075,891,888 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | காசுப்பாய்ச்சல் கூற்று மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரதியுடன் இணக்கஞ் செய்து சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு அடிப்படையின் படி குறுக்குப் பதிவு பெறுவனவுகளை கவனத்தில் எடுக்காமல் காசாகக் கிடைத்துள்ள செலவு வைத்தல்களை மாத்திரம் கவனத்தில் எடுத்து தயாரித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென மற்றும் வைப்புக் கணக்குகளின் கீழ் காசாக கிடைத்த ரூபா 7,574,836 இற்கான தொகை செயற்பாட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப் பாய்ச்சல் என பதியப்பட்டிருந்த ரூபா 743,145,952 இற்கான தொகையில் அடங்கியுள்ளது என. |
| (ஆ) | முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய காசு பாய்ச்சலுக்காக காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவுகள் எதுவும் செய்யப்பட்டிருக்காததுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதாந்த கணக்கு பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் முற்பணங்கள் திருப்பி அறவீடு செய்தல் ரூபா 20,444,357 தொகையாக இருந்தது. | பெறுமதியை சரியாக இனங்கண்டு உரிய முறையில் அறிவிக்க வேண்டும். | முதலீட்டுத் தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய பணம் ஏதும் காணப்படாமையால் நிதிப் பாய்ச்சல் கூற்றில் அந்தப் பதிவு செய்யப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு அறிக்கையில் முற்பணம் திருப்பி அறவீடு செய்தல் என ரூபா 20,444,357 தொகை எனக் காட்டப்பட்டுள்ளது. முற்பண பீ கணக்கிற்கு குறுக்கு பதிவுகளுடனான பெறுவனவுகள் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களில் மாற்றங்கள் என ரூபா 67,720 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் காசு தொழிற்பாடுகளின் மூலம் பணம் ஏதும் உருவாகியிருக்கவில்லை என கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | வைப்புக் கணக்கு மற்றும் ஏனைய பொறுப்புக்களில் மாற்றங்கள் என காட்டப்பட்டிருந்தது பொது வைப்புக்கள் மற்றும் கடன் கணக்கு மீதிகள் இடையே வித்தியாசமாகிய ரூபா 67,720 இற்கான தொகையாகக் காணப்பட்டதுடன் அடுத்த கணக்குகளின் மூலம் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | செயற்பாட்டு தொழிற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட தொகை என ரூபா 447,085,545 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிட்டிருந்த போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த மாதாந்த கணக்குப் பொழிப்பு மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் அந்தப் பெறுமதி ரூபா 1,506,981,188 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 1,059,895,643 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | செயற்பாட்டு தொழிற்பாடுகளுக்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 447,085,541 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆளுக்குரிய சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவுகளுக்காக பணமாக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் என மற்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மீதி திணைக்களத்தினால் திறைசேரிக்கு தீர்க்கப்பட்ட கட்டுநிதி அல்லாமல் இருந்ததுடன் திணைக்களத்திற்கு சொந்தமான அபிவிருத்தி நிதியத்தின் மூலம் அரசாங்க மதிப்பீட்டில் செலவுகள் மேற்கொள்வதற்காக மாற்றப்பட்ட பணத் தொகையாகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் படி ஆண்டின் போது ரூபா 296,128,127 தொகை பௌதீகச் சொத்துக்கள் நிர்மாணித்தல் மற்றும் கொள்வனவு செய்தல் என்பவற்றிற்காக முதலீடு செய்யப்பட்டது என காட்டியிருந்த போதிலும் நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் கொள்வனவு என ரூபா 217,897,402 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 78,230,725 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வித்தியாசத்திற்கான காரணங்களை இனங்கண்டு சரிசெய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்று கட்டுநிதி மற்றும் இணக்கஞ் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததால் அதில் பதிவு செய்யப்பட்டுள்ளது ஆண்டின் போது மூலதனச் செலவுகளுக்காக பணமாக செலவு செய்யப்பட்ட முழுச் செலவுகளாகக் காணப்பட்டதுடன் பணம் அல்லாத சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் பதியப்பட்டுள்ளது. |

### 1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழ் குறிப்பிட்டுள்ள சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப்பிரகாரம் மற்றும் நாளது வரை பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணைப் பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் அடங்கிய பிணைப் பதிவேடு ஒன்று தயாரித்திருக்க வில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிட்டுள்ள தகவல்கள் அடங்கக் கூடிய விதமாக பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக பிணைப் பதிவேடு ஒன்று பேணப்பட வேண்டியிருந்தது. | எதிர்காலத்தில் இந்தப் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | | |
| | நிதிப் பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின்சார உபகரணங்கள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 454(2) இன் குறிப்பிட்டுள்ள வாறு அரசாங்க கட்டிடங்களின் அனைத்து மின்சார துணைக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக பொருட் பதிவேடு ஒன்று | பிரதான களஞ்சியங்களில் இதற்கான தனியாக பதிவேடு பேணப்பட்டுவருவதுடன் தேவையெனின் எதிர்காலத்தில் இயந்திரங்களின் பெறுமதி மதிப்படு செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டுள்ள குழுவின் அறிக்கை கிடைத்திருத்த பின்னர் மின்சார உபகரண பதிவேடு |

| | | |
|---|---|---|
| | பேணப்பட வேண்டும். | ஒன்று தனியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். |
| (இ) வாகனங்களின் சம்பவக் குறிப்பேடு<br>------------------------------------------------------------ | | |
| நிதிப் பிரமாணங்கள் 1645(அ) இன் பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பேடு கள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 1645(அ) இல் குறிப் பிட்டுள்ள ஏற்பாடு களின் பிரகாரம் பொதுப் படிவம் 267 பிரகாரம் வாகன சம்பவக் குறிப்பேடுகள் அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் பேணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வாகனச் சம்பவக் குறிப்பேடுகள் நாளது வரை ஆக்கப் பட்டு பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருவதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வெற்றிகரமான தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன் படி முறைமை வெற்றிகரமாக நடாத்துவதற்கு தேவையான வித்தியாசங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்ப வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் பிரகாரம் செயற்பட வேண்டியிருந்தது. | இது தொடர்பாக சரியான முன் தெளிவு ஒன்று இன்மையால் உரிய மீளாய்வு எழுத்துமூலம் மேற்கொள்வதற்கு முடியாது போனது. |

**1.6.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு</u> | <u>இணக்கமின்மைகள்</u> | | |
| (அ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 1992 ஆகஸ்ட் 19 திகதிய 25/99 ஆம் இலக்கம் | திணைக்களத்திற்கு சொந்தமான 04 குழாம் வாகனங்களில் அரச இலட்சினை பதித்திருக்க வில்லை. | 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 25/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்களில் அரச இலட்சினை பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2006 திசெம்பர் 26 ஆம் திகதிய இலக்கம் 30/2006 | வாகனப் பராமரிப்பு, எரிபொருள் நுகர்வு, சம்பவக் குறிப்பேடு மற்றும் ஓட்ட அட்டவணை கள் பேணப்படல், எரிபொருள் வினைத் திறமையினை அளவை செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | 2006 திசெம்பர் 26 திகதிய மற்றும் 30/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் 2006 திசெம்பர் 26 திகதிய 30/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதாகவும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளின் சேமிப்புக்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நான்கு செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் 28 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் அவதானிக்கப்பட்டன. | மதிப்பீடுகள் சரியாகவும் நடைமுறை சாத்திய மாகவும் தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடுகள் தயாரித்தல் நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியினால் போதியளவு கட்டுநிதி வழங்கப்படாமை இந்த ஏற்பாடுகளின் சேமிப்புக்கு முக்கியமாக பாதித்திருந்தது. சில நிர்மாண வேலைகளின் வரைபுகள் தயாரித்தல், பெறுகை அலுவல் களுக்காக நீண்ட காலம் கழிதலும் மற்றும் நிர்மாண வேலை நிறுவனங்களினால் குறிப்பிட்ட காலத்தில் சிட்டைகள் சமர்ப்பிக்காமையும் நிதி ஏற்பாடு களின் சேமிப்பிற்காக பாதித்துள்ள ஏனைய காரணங்களாகும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு அணுகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் ஏதேனும் திணைக்களம் ஒன்று ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக் களுக்காக கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இடம் அளிக்கக் கூடாது எனினும் 09 செலவு விடயங்கள் தொடர்பாக சேமிப்புக்களை மிகைத்து ரூபா 8.89 மில்லியனிற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | நிதிப் பிரமாணம் 94 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | திணைக்களத்தினால் மேற்கொள் ளப்பட வேண்டிய கட்டாயக் கொடுப்பனவுகளின் காரணமாக ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு அணுகுவதற்கு நேரிட்டிருந்தது என கருணையுடன் அறிவித்துக் கொள்வதோடு எதிர்காலத்தில் இதனை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மேலும் அறிவிக்கின்றேன். |

## 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 18,848,170 தொகை பெறுமதியான வைப்புக்கள் உரிய கணக்குகளுக்கு செலவு வைக்காமல் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலம் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 02 வருடங்களை மிகைத்துள்ள அனைத்து வைப்புக்களையும் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். | 2018 ஆண்டு முதல் நாளது வரை ஆக்கப்பட்டு பேணப்படுகின்றது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மிருகக்காட்சிசாலைகள் திணைக்களத்தினால் 2018 ஆண்டில் செயற்படுத்த உத்தேசித்துள்ள ஐந்து செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 184 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த விளைவினை பெற்றுக் கொள்ளாமை யால் வருட இறுதி அளவில் அவற்றில் ரூபா 124.88 மில்லியன் தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களை விரைவாக பூர்த்தி செய்து எதிர்பார்த்த விளைவுகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொதுவாக பார்க்கும் போது மிருகக்சாட்சிச் சாலைக்கு பொருத்தமான விதத்தில் திட்டங்கள் தயாரிப்பதற்காக குறிப்பிட்ட ஒரு காலம் தேவைப்படுகிறது. திட்டங்கள் தயாரிக்கப்பட்டவாறு சில செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யதவற்கு முடியாமல் போனது விலைகூறல்கள் அழைப்பு மேற்கொள்ளப்பட்டாலும் அவை பல்வேறு காரணங்களினால் இரத்து செய்யப்படுவதினால் மீண்டும் கூறுவிலை அழைப்பதற்கு நேரிடல் திறைசேரியினால் கட்டுநிதிகள் வழங்குவதில் தாமதம் ஆகிய காரணங்களினால் என மேலும் அறிவிக்கின்றேன். |

### 3.2 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 202.7 மில்லியன் தொகையை உடைய 06 செயற்திட்டங்கள் குறிப்பிட்ட ஒப்பந்த கம்பனியின் தாமதங்களின் காரணத்தினால் 2018 வருட இறுதி வரை பூர்த்தி செய்யாமல் கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக வருட இறுதி அளவில் ரூபா 89 மில்லியன் தொகை செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டம் கைவிடப்பட்டதால் அரசு ஏற்பட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் மீண்டும் அந்த செயற்திட்டங்களை விரைவாக ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த நிறுவுனத்தில் ஏற்பட்டிருந்த நிருவாகச் சிக்கல் ஒன்றின் காரணமாக நிர்மாண வேலை களில் தாமதம் ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் தற்போது அந்த நிர்மாண வேலைகள் அந்த நிறுவனத்தினால் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| Food Cutter & Garbage Crusher கொள்வனவு செய்வதற்காக ரூபா 12.5 மில்லியனிற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் வருட இறுதி வரை அந்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | முன்னர் திட்டம் தயாரிக்கப்பட இயந்திரமே கொள்வனவு செய்வதற்காக தற்போது உரிய கணியப் பட்டியல் தயாரிக்கும் அலுவல்கள் உசாத்துணை கம்பனியினான் மேற்கொள்ளப்படுகின்றது. |

**3.4 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையில் பிரிவு 3.2 இன் பிரகாரம் விலைகூறல் அழைக்கும் போது முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் உரிய இணையத் தளங்களில் பிரசுரிக்க வேண்டுமெனினும், மிருக வைத்திய உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக அழைக்கப் பட்ட விலைகூறல் அறிவித்தல் தேசிய பத்திரிகைகளில் மாத்திரம் பிரசுரிக்கப் பட்டிருந்தது. இதன் பெறுபேறாக போதியளவு எண்ணிக்கையான விலைகூறல்கள் கிடைத்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட்டு இயன்ற அளவு போட்டி அடிப்படையில் கூறுவிலை அழைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த மிருக வைத்திய உபகரணங்கள் இலங்கையில் பயன்படுத்துதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படும் காரணத்தினால் உபகரணங்களின் வழங்குனர்களும் இலங்கையில் குறைந்த மட்டத்தில் காணப்படல், குறைந்த எண்ணிக்கையான கூறுவிலைகள் கிடைப்பதற்கு அடிப்படைக் காரணமாக இருந்ததுடன் இணையத் தளங்களில் அறிவித்தல் வெளியிடுதல் திணைக்களத்தினால் பொதுவாக மேற்கொள்ளப்படுவதில்லை. |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டல் கோவை யின் 7.9.2 இன் பிரகாரம் பதில் அளிக்கக் கூடிய விலைகூறல்கள் அனைத்து முனைகளிலும் உரிய அதிகாரியின் மதிப்பீட்டை விட மிகைக்குமிடத்து மிகை கிரயத்திற்கான காரணத்தை பெறுகை நிறுவனத்தினால் விசாரணை செய்து புதிதாக விலைகூறல்கள் அழைப்பதற்காக கவனம் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும் மேற் கூறிய 3.4(அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள கொள்வனவுக்காக அவ்வாறான இணக்கம் ஒன்றும் மேற்கொள்வதற்காக கொள்வனவு செய்யும் பண்டம் தொடர்பாக விலை மதிப்பீடு ஒன்று தயாரித்திருக்கவில்லை. | -மேற்படி- | சந்தை விலை பற்றி அறிவு ஒன்று காணப்படாமையால் சரியான விலை மதிப்பீடு ஒன்று தயாரிப்பதற்கு முடியாமல் போனது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருடாந்த பெறுகை திட்டத்தில் ரூபா 12.5 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பீடு செய்திருந்த மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக கிடைத்திருந்த விலைகூறல்களின் படி ரூபா 26.8 மில்லியன் உண்மையாக செலவிடப்பட்டிருந்த போதிலும் இந்த கிரய முரண்பாடுகள் தொடர்பாக அலசி ஆராய்தல் ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திக்கவில்லை. | -மேற்படி- | இந்த உபகரணக் கொள்வனவு முதல் முறையாக நடைபெற்ற துடன் இந்த உபகரணங்கள் இலங்கையில் பயன்படுத்தல் மிகவும் குறைவானதால் அதற்காக சந்தையொன்று காணப்படவில்லை. அதன் காரணமாக வருடாந்த பெறுகைத் திட்டத்தில் பெறுமதியை விட மிகைத்துள்ளதுடன் இந்த பெறுவனவு அலுவல்களின் மூலம் உயர்ந்த தரத்தை சேர்ந்த பண்டங்கள் கூடியளவு குறைந்த கிரயத்திற்கு பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது. |

### 3.5 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் முகாமைத்துவப் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பின்னவல யானைகள் சரணாலயத்தில் கழிவுநீர் வெளிச்செல்வதற்காக முறையான வடிகால் முறைமையொன்று நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் எதுவித சுத்திகரிப்பு செய்தலும் இன்றி அண்மையால் உள்ள ஆற்றிற்கு கழிவு நீர் விடுவிக்கப்பட்டிருந்தது. | முறையான வடிகால் முறைமை ஒன்று நிர்மாணிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | யானை கொட்டில் சுத்தம் செய்யும் போது வெளியேற்றப் படும் கழிவுநீர் சுதந்திரமான நீர் மூலவளங்களுடன் சேர்வதை தடுப்பதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையொன்று (waste water treatment plant) அனைத்து யானை வகுப்புக்கள் மற்றும் யானைக் கொட்டில்களை தொடர்புபடுத்தி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | பின்னவல யானை சரணாலயத்தில் இந்த யானைகள் தடுத்து வைத்துள்ள இடங்களுக்கு அண்மையில் யானை சாணம் மற்றும் மீதியான உணவுப் பகுதிகள் குவித்து வைத்து காணப்பட்டிருந்தமையால் வளாகம் அசுத்தமாகக் காணப்பட்டது. | யானை சாணம் மின்சுழற்சி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவுப் பொருட்களை அரைத்து சிறிய பகுதிகளாக வேறாக்கக் கூடிய இயந்திரம் ஒன்று பொருத்துவதற்கு பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

**4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்த போதிலும் அவற்றை நெருங்குவதற்கு இயலுமான விதத்தில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக முன்னேற்றம் ஏதும் பெற்றிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்கக் கூடிய விதமாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி 15 ஆவது குறிக்கோளின் பிரகாரம் பாதுகாப்பு அலுவல்களை அபிவிருத்தி செய்வதற்காக பாதுகாப்பு நிலையம் நிர்மாணித்தல், ஏழாவது குறிக்கோளின் பிரகாரம் சூரிய சக்தி சூடேற்றும் கருவி நிர்மாணித்தல், ஆறாவது குறிக்கோளின் பிரகாரம் குளங்கள் நிர்மாணித்தல், முதலாவது குறிக்கோளின் பிரகாரம் ஏழ்மையை ஒழிப்பதற்காக பக்கத்திலுள்ள பயிர்களின் விற்பனைக்காக சந்தர்ப்பங்கள் பெற்றுக் கொடுத்தல் பண்ணிரண்டாம் குறிக்கோளின் பிரகாரம் குப்பை மீள்சுழற்சி மேற்கொள்ளல் ஆகிய திணைக்களத்தினால் மேற் கொள்ளப்படுகின்றன என தயவுடன் அறியத் தருகின்றேன். அதே போல் இவ் விடயங்கள் செயல் நடவடிக்கை திட்டத்தில் அடங்கியுள்ளன. |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40.4 ஆம் பிரிவின் பிரகாரம் அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கண்ககாய்வு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(4) ஆம் பிரிவின் பிரகாரம் 2019 ஆண்டு முதல் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் மென் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வு திணைக்களத்தில் அறிவுரையின் படி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தில் 169 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் சிரேஷ்ட மட்டத்தில் 06 பதவிகள் மற்றும் இரண்டாம் மட்டத்தில் 40 பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்டமையால் திணைக்களத்தில் செயற்பாட்டு வினைத்திறன் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்பத் தரத்தைச் சேர்ந்த 32 உத்தியோகத்தர்கள் 2019 ஏப்ரல் மாதத்தில் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீதியான பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. |